பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 30 வெள்ளிக்கிழமை (16-10-1992) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் 323

# வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மட்டுமே உகந்தது

## பிரிட்டிஷ் அமைச்சர் வற்புறுத்து

கொழும்பு, அக்டோபர் 16

வடக்கு — கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மட்டுமே உகந்தது. உரிய அரசியல் தீர்வை பேச்சுவார்த்தை மூலம் விரைவில் காண வேண்டும்.

இவ்வாறு இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் துணை அமைச்சர் மார்க் பொய்ட், ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது வற்புறுத்தினார்.

திரு. பொய்ட் பிரிட்டனின் வெளிவிவகாரம், பொதுநலவாய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான துணை அமைச்சராகப் பணி புரிகிறார்.

அவர் ஜனாதிபதி பிரேமதாசவுடன் நடத்திய உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையின் போது —

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே உகந்தது என்றும் —

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வை காண்பதனை விரைவுபடுத்த வேண்டும் என்றும் —

இராணுவத் தீர்வை நாடுவதை நிறுத்திவிட வேண்டும் என்றும் — கூறியதாக அறிய

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பொலன்னறுவை எல்லையில் 170 கிராமவாசிகள் கொலை

### சிப்பாய்கள், பொலீஸாரும் அடங்குவர்

கொழும்பு, அக். 16

பொலன்னறுவ வடக்கு எல்லைப் பகுதியில், நான்கு கிராமங்கள் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாத ஆயுதபாணிகள் நடத்திய தாக்குதலில் 170க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்றும், 80 பேர் வரையில் படுகாயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் எட்டு இராணுவத்தினர், பதினொரு பொலீஸார் தவிர ஏனையோர் அனைவரும் கிராமவாசிகள் என்றும் அவர்களில் 117 பேர் வரையில் முஸ்லிம்கள் என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இச்சம்பவம் குறித்து வெளியான மேலதிக விவரங்கள் வருமாறு:-

★ சுமார் 150 பேர் வரையான ஆயுதக் குழு ஒன்று நேற்று அதிகாலை 4-45 மணியளவில் பள்ளிசொட்லன, பம்புரன, அகமட்புர, அக்போபுர ஆகிய கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தியது.

★ அப்பகுதிகளில் உள்ள இராணுவ முகாம், பொலீஸ் நிலையம் ஆகியனவும் ஆயுதபாணிகளின் தாக்குதலுக்கு இலக்காகின.

தாக்குதல் நடத்தியவர்கள் எண்பதுக்கும் மேற்பட்ட வீடுகளைத் தீக்கிரையாக்கினர்.

★ உயிரிழந்தவர்களில் பெண்கள், சிறார்களும் அடங்குகின்றனர். படுகாயமடைந்தவர் பொலன்னறுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

★ தாக்குதலுக்கு இலக்கான அகமட்புர, அக்போபுர ஆகியவை முஸ்லிம் கிராமங்கள் எனவும், மற்றைய இரு கிராமங்களிலும் சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### ஐ. நா. மனித உரிமைகள் குழு வந்துள்ள வேளை

## அரசு திட்டமிட்டுச் செய்த கொலைகளாக இருக்கலாம்

### லோறன்ஸ் திலகர் சந்தேகம்

லண்டன், அக். 16

பொலன்னறுவையில் இடம்பெற்ற படுகொலைகள் அரசின் திட்டமிட்ட செயலாக இருக்கலாம். ஐ. நா. மனித உரிமைகள் குழு கொழும்பில் தங்கியிருக்கும்போது புலிகள் மீது அபாண்டமான குற்றச்சாட்டை சுமத்துவதற்காக அரசு இந்தத் தந்திர வேலையைச் செய்திருக்கலாம்.

இவ்வாறு கருத்து வெளியிட்டார் விடுதலைப் புலிகளின் பிரமுகர் லோறன்ஸ் திலகர்.

பொலன்னறுவைச் சம்பவம் குறித்து பி பி ஸி. செய்தியாளர் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்-

இந்த விடயம் குறித்து பாரிஸில் இருந்து தொலைபேசி மூலம் பி. பி. ஸிக்கு அவர் பேட்டியளித்தார்.

பொலனறுவைக் கொலைச் சம்பவத்தை விடுதலைப் புலிகள் செய்திருக்கலாம் என்று பி. பி. ஸி செய்தியாளர் குறிப்பிட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இச்சம்பவத்துக்கு விடுதலைப் புலிகள் மீது பி பி ஸி செய்தியாளர் குற்றம் சுமத்தியபோது திரு. திலகர் வழங்கிய பதில் வருமாறு:-

இச்சம்பவம் குறித்து எனக்குத் தலைமைப் பீடத்திலிருந்து எந்தவிதமான தகவலும் இன்னும் வரவில்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டாட்சிக்கு சிங்களவர் இணங்காவிடின்

## இலங்கையை ஆக்கிரமித்து அங்கு 2 மாநிலங்களை அமைப்போம்!

### சுப்பிரமணியசுவாமி கூறுகிறார்

சென்னை, அக். 16

"இந்தியாவைப் போன்று கூட்டாட்சி அமைப்பு ஒன்றை ஏற்படுத்த இலங்கை அரசு இணங்காவிடின், இந்தியா இலங்கை மீது படையெடுத்து அதை இந்தியாவுடன் இணைத்துக் கொண்டு "ஈழநாடு", "சிங்களப் பிரதேசம்" என்று மேலும் இரு மாநிலங்களை இந்தியாவில் ஏற்படுத்த வேண்டும்".

இவ்வாறு கூறுகிறார் ஜனதா கட்சித் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி.

தமிழகத்திலிருந்து வெளிவரும் வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

அவர் அப்பேட்டியில் மேலும் கூறியதாவது:-

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு இரு வழிகளில்தான் தீர்வு காண முடியும்.

ஒன்று — இந்தியாவைப் போல கூட்டாட்சி அமைப்பை ஏற்படுத்தி, தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் தனித் தனி மாநில சட்டமன்றங்களையும் அதிகாரங்களையும் பொதுவான நாடாளுமன்ற அமைப்பின் கீழ் உருவாக்கும்படி இலங்கை அரசை வற்புறுத்துவது. இலங்கை — இந்திய ஒப்பந்தமும் இதற்கு வழி கோலும் விதத்தில் அமைந்துள்ளது.

மற்றது — இதற்கு இலங்கை அரசு இணங்காவிடில் இலங்கை மீது படையெடுத்து அந்த நாட்டை இந்தியா ஆக்கிரமிக்க வேண்டும்.

கேள்வி:- இது ஒரு சுதந்திர நாட்டில் தலையிடுவதாகாதா?

பதில்:- [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அடம்பனில் நான்கு படையினர் பலி!

யாழ்ப்பாணம், அக். 16

மன்னார் மாவட்டம் அடம்பனில் உள்ள பாலைக்கொடி என்னுமிடத்தில் நேற்று முற்பகல் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

அப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த தொடர் காவலரண்களில் இருந்து வெளியேறி சுமார் 500 யார் தொலைவில் உள்ள கப்புக்கண்டல் என்னும் இடத்துக்கு வீதித் தடைகளை அகற்ற வந்த 10க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஐந்து நிமிட நேரத் தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

இந்த அதிரடித் தாக்குதலின் போது படையினரிடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

★ ரி-56 துப்பாக்கி — 04
★ அவற்றுக்குரிய மகஸீன்கள் — 16
★ நடுத்தர ரவைகள் — 676
★ ஜே.ஆர். கிரனேட் — 02
★ ஏ. கே. மகஸீன் கோசர் — 04
★ புகைக் குண்டு — 01
★ இராணுவத் தொப்பி — 05

## ராணுவம்பிடித்த இடங்களை மீட்பதற்கு புலிகள் திட்டம்

### அதிகாரி ஒருவர் தகவல்

கொழும்பு, அக். 16

வடபகுதியில் தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சில பகுதிகளை மீண்டும் கைப்பற்றும் குறுகிய காலத் திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகள் வகுத்துள்ளனர்;

பாதுகாப்புப் பிரிவினருக்கு இது தொடர்பான தகவல் கிடைத்திருப்பதாக வடபகுதி இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்:

'லங்காதீப' சிங்கள நாளிதழ் மேற்கண்ட செய்தியை வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் வடபகுதியில் கைதான விடுதலைப் புலிப் போராளி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்ததாகவும்—

இதனையடுத்து பூநகரி, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, மன்னார், மணலாறு,

(5 ஆம் பக்கம் பார்க்க)

### அடுத்த பட்ஜெட்டில்

## இராணுவத்துக்கு மட்டும் ரூ. 780 கோடி ஒதுக்கீடு

கொழும்பு அக். 16

1993 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இராணுவத்துக்கு 780 கோடி ரூபாவும்—

கடற்படைக்கு 150 கோடி ரூபாவும், விமானப் படைக்கு 160 கோடி ரூபாவும், பொலீஸ் படைக்கு 870 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

## அம்பாறை முகாம் ஒன்றில் தமிழ் அகதிகள் மீது தாக்கு

கொழும்பு. அக். 16

அகதி முகாம் ஒன்றினுள் நுழைந்த கோஷ்டி ஒன்று அங்கிருந்த தமிழர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் கடந்த வாரம் அம்பாறை தமிழ் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

தாக்குதல் நடத்திய கோஷ்டி அகதி முகாமுக்குள் குப்பை கழிவுகளைப் போட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகள் இது தொடர்பாக அரசாங்க அதிபருக்கு முறையிட்டுள்ளனர் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

### உடுவில் மக்களிடம் நாளை நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், அக். 16

உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கும் பணியில் நாளை சனிக்கிழமை —17 ஆம் திகதி உடுவில் மக்களிடம் மீட்பு நிதி சேகரிக்கப்பட உள்ளது;

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழும் மக்கள் தமது தமிழீழ மீட்பு நிதியை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை செலுத்தலாம்; இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ மீட்புநிதிப் பிரிவினர் தெரிவித்தனர். [அ]

### படையினர் சூடு! மீனவர்கள் தப்பி வந்தனர்

வடமராட்சி அக். 16

பருத்தித்துறை முனைப் பகுதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி சிறிலங்காப் படையினர் தாக்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

காட்டினில் மரங்களை உயர்த்துவோம்
நாட்டினில் மழையினை வீழ்த்துவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



(கொக்குத் தொடுவாய் இராணுவத் தினருடன் நேரடி மோதலில்)

மயில்வாகனம் சேதுலிங்கம்

### லெப். நீலன் [சதீஸ்]

| வீரஜனனம்: | வீரமரணம்: |
|---|---|
| 13—02—1975 | 16—10—1991 |

வீரம் விளையாடும் வல்வெட்டித்துறை பெற்ற மைந்தா!
திறம் பல காட்டி எதிரியை நீ திகைக்கவைத்தாய்!
"சேது நான் சாது அல்ல" என்று எதிரிக்கு.
கொக்குத்தொடுவாயில் சீறி நின்ற புலியே நீ!
பயணம் முடியுமுன்னே பாதியிலே சென்றாயோ!
வெள்ளை நிறத்தவனே! வேதனையில் சிரிப்பவனே!
பிஞ்சு முகம்மாறா பஞ்சு மனத்தவனே!
கெஞ்சிக் கேட்டாலும் கிடைப்பாயோ நீயெமக்கு
நெஞ்சை நிமிர்த்தி நாம் நிற்று! கரைப்பதற்கு
பிஞ்சு உன் போன்ற பிள்ளைகளின் தியாகமன்றோ!!

புதுவளவு,
வல்வெட்டித்துறை:

கொழும்பப்பா, அம்மாச்சி,
அப்பா, அம்மா, அண்ணா,
அத்தான், அக்கா, மருமகன்

[சி/3491]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04 — 10 — 1948 | 16 — 09 — 1992 |

அமரர்

### சுப்பிரமணியம் சண்முகராசா

(சண்முகம் - சாரதி)

திடீரென்று வந்தான் காலன்
தீயினில் வெந்தது உடல்
காற்றினிலே கலந்தது ஆன்மா!

இன்று 16 - 10 - 1992 இல் நடைபெறும் அந்தியேட்டிக் கிருத்திய நிகழ்ச்சிகளில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், தாய் சகோதரர்கள்,
மைத்துனர்கள், மருமக்கள், பெறாமக்கள்.

தொட்டிலடி,
சண்டிலிப்பாய் கிழக்கு.

[22912]

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| இம்மையில்: | மறுமைக்குள்: |
|---|---|
| 20 — 07 — 1916 | 16 — 10 — 1981 |

### யோபுப்பிள்ளை எட்வேட் சவுந்தரராஜா

(Retd. A C C D.)

நானே உயிர்த்தெழுதலும்
ஜீவனுமாயிருக்கிறேன் - என்னை
விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;

யோவான் 11 : 25

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: ச. வசந்தகுமார்.

இல. 7, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[5389]

## இன்று

யாழ்ப்பாணம், அக். 16

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு திரிவேணி சங்கமம் கலை விழா நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. மு. இராமலிங்கம் விழாவுக்குத் தலைமை வகிப்பார். பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் திரு ஆர். எஸ். நடராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

★ ★ ★

யாழ்ப்பாணம், அக். 16

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களின் ஓவிய சிற்பக் காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 10. 00 மணிக்கு யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய கலைக்கூடத்தில் திறந்து வைக்கப்படும்.

யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இதனைத் திறந்து வைப்பார்.

கலைக்கூடம் இன்று முதல் ஞாயிறு வரை காலை 9. 00 மணி முதல் பிற்பகல் 4 00 மணிவரை திறந்திருக்கும்.

## முகாமைத்துவ கருத்தரங்கு

யாழ்ப்பாணம், அக். 16

கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தினால் அதிபர் தரம் 1க்கான கருத்தரங்கு எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற உள்ளது.

முதலாம் தர அதிபராகப் போட்டிப் பரீட்சை மூலம் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற அதிபர்களும்—

இதுவரை முகாமைத்துவப் பயிற்சி பெறாத முதலாம்தர அதிபர்களும்—

இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளரால் அழைக்கப்பட்டுள்ளனர். [இ]

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், அக். 16

மருதனார்மடம் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட ஆரம்ப பாடசாலைகளிலும், ஆரம்ப பிரிவுகளிலும் கடமையாற்றும் ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புகள் இன்று முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை மேற்படி கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் ஆண்டு 6 முதல் 11 வரையான வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாட நெறிகளைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்புகளும் நாளை 17ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

[ஓ-5]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

B. A. Part - I;
B. Com. Part - I

இரண்டாம் ஆண்டு கற்கை நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன;

பொருளியல்:
எஸ். வரதராஜன்
B. A. (Hons )

ஆரம்பம்:
18 - 10 - 1992
ஞாயிறு 10-00 a m,

பாரதிதாசன் கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
G. A. Q ;
Ist. in Com.
விரிவுரைகள்
[illegible]

[சி-857?]

## லொறி டயருக்குள் வைத்து பொலித்தீன் கடத்த முயற்சி

### பொலிஸார் முறியடித்தனராம்

கொழும்பு, அக். 16

லொறி டயருக்குள் பொலித்தீனை மறைத்து வைத்து வடக்கிற்கு கடத்திச் செல்ல முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்றை கிளாபம் பொலீஸார் கண்டுபிடித்தனர் என்று கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று கூறுகிறது

பொருள்கள் ஏற்றப்படாமல் வெறுமனே சென்ற லொறியில் பொலித்தீன் எடுத்

(5 ஆம் பக்கம் பார்க்க)

HARTLEY COLLEGE
ANNUAL PRIZE GIVING - 1992

Date: 17 — 10 — 1992 Saturday
Time: 9-00 a. m.
Venue: Y. M. C. A. Hall Pt-Pedro.
Chief Guest:
Mr. D. R Arumaynayagam

(22913)

## கண்ணீர் அஞ்சலி

கூட்டுறவுப் பரிசோதகராகவும், வட பகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் நிர்வாகச் செயலாளராகவும், தேசிய கூட்டுறவுச் சபையின் செயலாளராகவும், யாழ். மாவட்ட சிக்கன சேமிப்பு கூ. சங்கங்களின் சமாசத் தலைவராகவும் இருந்து கூட்டுறவுத் துறைக்கு பெருந்தொண்டாற்றிய அமரர் பொ. செல்வரத்தினம் அவர்களுக்குக் கூட்டுறவாளர்கள் செலுத்தும் கண்ணீர் அஞ்சலி



நல்லாசானாயிருந்து நமதின்ப கூட்டுறவை
எல்லோரும் போற்றும் வகை எழிலாக வளர்த்த
நல்ல
வல்லோரும் செல்வ ரத்தினத்தார் பிரிவறிந்து
எல்லோரும் வாடுகின்றோம், அவர் பணியே
நாடிடுவோம்

கன்றிழந்த பசுவதுபோல் கதறுகிறோம்
இப்புவியில்
நன்றாக கூட்டுறவில் நனைந்தே உழைத்த நற்
பண்பாளன் செல்வரத்தினத்தார் எமைவிட்டு
சென்றார் எனும் செய்தி கேட்டே

வாட்டமுடன் அலைகின்ற வாழ்வதனை
விரும்பாது
நாட்டுயர்வு வேண்டி நாளுமே உழைத்த நற்
கூட்டுறவாளன் செல்வ ரத்தினம் என்னும்
நல்லான்
காட்டிய பாதை வழி கலந்து நாம்
சென்றிடுவோம்.

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபையும்,
அதன் அங்கத்துவ சங்கங்களும்
கூட்டுறவாளர்களும், பணியாளர்களும்

[சி-3489]

## கண்ணீர் அஞ்சலிகள்

### திரு. பொ. செல்வரத்தினம்

மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் பழைய மாணவ சங்கத் தலைவரும், இளைப்பாறிய கூட்டுறவு இலாகா உத்தியோகத்தரும், மறுமலர்ச்சி ஆயுட்காலத் தலைவருமான திரு. பொ. செல்வரத்தினம் காலமானார்.

அவருக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

(இ/3599)

தகவல்:
அதிபர்

### பொ. செல்வரத்தினம்

(ஓய்வுபெற்ற கூட்டுறவு பரிசோதகர்)

ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகரும், வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபை காரியதரிசியும், கூட்டுறவுக் கல்லூரி அதிபரும், சிக்கன கடனுதவு சங்க முன்னாள் தலைவரும், மறுமலர்ச்சி மன்ற தற்போதைய தலைவருமான திரு பொ. செல்வரத்தினம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூட்டுறவாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.

[சி-3490]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை உருளைக்கிழங்கு பெற பணம் அனுப்ப வேண்டும்

## 'குமாரி'யில் வரவில்லை

யாழ்ப்பாணம், அக். 16

இப்போது பருத்தித்துறை வந்துள்ள ''குமாரி'' கப்பலில் முன்னர் எதிர்பார்க்கப்பட்டது போல விதை உருளைக் கிழங்கு எடுத்துவரப்படவில்லை. அடுத்து வரும் ''குமண''விலேயே கொண்டு வரப்படும். அதுவும் உரிய நேரத்தில் இங்கிருந்து பணம் கொழும்பு போய்ச்சேர வேண்டும்.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான 200 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கை அனுப்பி வைக்க அதற்குரிய 60 லட்சம் ரூபாவை இம் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் தருமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகம் யாழ். அரச அதிபரைக் கேட்டிருந்தார்.

ஆனால் அவ்வேளை சமநல சேவைகள் திணைக்களத்திடம் போதிய பணம் சேராததால் பணத்தை அனுப்பி வைக்க முடியவில்லை அதனால் விதை உருளைக் கிழங்கு இங்கு அனுப்பப்படவில்லை.

''குமண''வில் விதை உருளைக் கிழங்கைத் தருவிப்பதானால் விவசாயிகள் யாழ். சமநல சேவை நிலையத்தில் முற்பணத்தைத் தாமதமின்றிச் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. [த-162]

## சுன்னாகம், உடுவில் பகுதிகளில் அதிகரித்து வரும் திருட்டுகள்

உடுவில், அக். 16

சுன்னாகம், உடுவில், இணுவில் ஆகிய பகுதிகளில் திருட்டு, கடையுடைப்புப் போன்ற குற்றச் செயல்கள் பெருமளவு அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

உடுவில் டச் வீதியில் உள்ள இரு தனியார் வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பல ஆயிரம் பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இணுவிலில் உள்ள புடைவைக்கடை ஒன்றும் இவ்வாறு இரவு வேளையில் உடைக்கப்பட்டுபுடைவைகள் திருட்டுப் போயுள்ளன.

உடுவில் பகுதி வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள் பகல் வேளையிலேயே திருட்டுப் போயுள்ளன.

இதேவேளை — மயிலணி, ஏழாலை ஆகிய பகுதிகளில் சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்துக்கு சொந்தமான மூன்று கிளைக்கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டன.

இதனையடுத்து திருட்டுக்களைத் தடுக்க கிராம மக்களே ஆங்காங்கு பாதுகாப்புக் குழுக்களை அமைத்து வருகின்றனர். [த-152]

## அ.தி.மு.க. அரசைக் கவிழ்க்க தி.மு.க.-சுவாமி கூட்டுச் சதி

### தமிழக காங்கிரஸ் பொதுச் செயலர்

அ.தி.மு.க. அரசைக் கவிழ்க்க தி.மு.கவுடன் சேர்ந்து ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சதி செய்வதாக தமிழ் நாடு காங்கிரஸ் பொதுச் செயலாளர் வி. தண்டாயுதபாணி குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

டாக்டர் சுவாமி மாநில ஆளுநரிடம் சமர்ப்பித்த மகஜரில் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எதிராக சுமத்திய குற்றச்சாட்டுக்கள் எல்லாம் தி.மு.க. தலைவர் கருணாநிதி சுமத்திய குற்றச்சாட்டுகளே என்றும் அவர் தெரிவித்தார்.

அ.தி.மு.கவை அழிப்பதற்கு டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி செய்து வரும் முயற்சிகளை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்றும் அவர் கூறினார். [த-எ]

## ஜூலை மாத கொடுப்பனவுகள்

வலி-வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான ஜூலை மாத கொடுப்பனவுகள் கடந்த வியாழக்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றன. [த-162]

## ஆண்டு விழா

அரியாலை சனசமூக நிலையத்தின் 43 வது ஆண்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இரவு இடம் பெறும் கலை நிகழ்ச்சியில் தமிழீழ காவல் துறை இசை அணியின் "எக்காளம்" வாத்திய இசை நிகழ்ச்சி முதன் முதலாக மேடையேற்றப்படுகின்றது. [த-17]

## நியமனம்

சுழிபுரம், அக். 16

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் புதிய அதிபராக திரு. கா. சந்திரபாலா அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார். (த-23)


யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் புனரமைப்பு

## பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் புனரமைப்புப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 18-10-92 பி. ப. 2.00 மணிக்குக் கல்லூரியில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகமளித்து கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி:

திருமதி P. இராஜேந்திரசிங்கம்,
தலைவர் / அதிபர்.

(22839)



## திருமண நன்றித் திருப்பலி அழைப்பு

நிகழும் ஆங்கீரச வருடம் ஐப்பசி மாதம் 1-ஆம் நாள் 17-10-1992 சனிக்கிழமை மாலை 4மணியில் வரும் சுபவேளையில்,

எமது ஜேஷ்ட புத்திரன்
ஐவன் கலிஸ்ரஸ் (இராஜன்)
(West Germany-Before reunion)
அவர்களுக்கும்

திரு திருமதி தி. ச. இராசநாயகம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
எலிசபெத் ராணி
(முன்னாள் ஆசிரியை, பூநகரி நல்லூர் தமிழ் மகா வித்தியாலயம்)
அவர்களுக்கும்

Goslar, West Germany இல் நடைபெறும் திருமணத்தையொட்டி யாழ் நல்லூர் புனித ஆசிர்வாதப்பர் ஆலயத்தில் நன்றித் திருப்பலி பிற்பகல் 4-30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். நன்றித் திருப்பலியில் பங்குபற்றி மணமக்களின் இல்வாழ்வு சிறப்புற அமைய இறைவனுக்கு ★ நன்றி கூற அழைக்கின்றோம். ★

திரு. திருமதி க. யோக்கிம்பிள்ளை (போல்),
425, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி இ. அருளம்மா,
59, ஆசிர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(22881)



உ
சிவமயம்
மட்டுவில் கல்வம்
சந்திர மௌலீசப் பெருமான் ஆலய
முன்னாள் பிரதம சிவாச்சாரியர்
சிவஸ்ரீ அ. சிவசாமிக் குருக்கள்
அவர்களைக் கௌரவிக்கும்

## ★ உபசரணை விழா ★

இடம்: மட்டுவில் செல்லப்பிள்ளையார் ஆலயம்.

காலம்: 18-10-92 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2-00 மணி.

தலைவர்: ''பிரதிஷ்டா சித்தர், சிவாகமஞான சாகரம், கிரியாஞானகலாமணி''
சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள்

அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(5393) - மட்டுவில் இந்து இளைஞர் மன்றம்.



## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பாட நெறிகளான.

★ கலைமாணி (B.A.) பகுதி-I (2ஆம் வருடம்)

★ வணிகமாணி (B.Com.) பகுதி-I (2ஆம் வருடம்)

விரிவுரைகள்: 24 – 10 – 1992 காலை 8-00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு;

உதவிப் பதிவாளர்;
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-8584)



## கேள்வி அறிவித்தல்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் 1992ஆம் ஆண்டுக்கான அவசரகால புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்தின் கீழான பின்வரும் வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையில் குறிப்பிட்ட பிரகாரம் கேள்விப் பிணைப் பணத்தையும், கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்திப் பெற்றுக் கொண்டதன் பேரில் பெறப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலம் கேள்விகள் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விகளை நேரிலோ, பதிவுத் தபாலிலோ, விசேட ஆணையாளர், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை என்னும் முகவரிக்கு 27 - 10 - 1992 ஆம் திகதி பி.ப. 3-00 மணிக்கு முன்பு சேர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 23 - 10 - 1992 ஆம் திகதி பி. ப 3-00 மணிக்கு முன்பு பெற்றுக் கொள்ளல் வேண்டும். 28 - 10 - 1992 பி.ப. 1-30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

போதிய காரணங்களுக்காக கேள்விகளை ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| வேலையின் பெயர் | கே.ப பணம் | கே.வை.பணம் |
|---|---|---|
| 1. இந்திராபுர வீதித் திருத்த வேலை 1ஆம் கட்டம் | 200-00 | 1000-00 |
| 2. இந்திராபுரம் முகமாலை பளை வீதி 2 ஆம் கட்டம் | 100 00 | 300-00 |
| 3. அரசர் கேணி வீதித் திருத்த வேலை | 150-00 | 250-00 |

ஒப்பம்: கு. அன்னமயில்,
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை. 05-10-1992.

(கி-3487)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய நல்ல ரக வெளி நாட்டு கம்பளங்கள் (Carpets) விற்பனைக்கு உள்ளன. சனி, ஞாயிறு பிற்பகல் 2-00—6-00 மணிவரை பார்வையிடலாம். டாக்டர் சு. நடராஜா. இல. 14, அரச வீதி, (சங்கிலியன் வீதி வடாக) நல்லூர் யாழ்ப்பாணம். (22909)

### விற்பனையாகின்றது

சைவநெறி வினா-விடை. (ஆண்டு 10-11) ஆக்கம் இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம் B. A. (Hons) Dip-in Ed. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்; ஸ்ரீகாந்தா புத்தகசாலை, இல. 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (22850)

### வாழ்த்து மடல்கள்

ஏராளமான டிசைன்களில் அழகிய தீபாவளி வாழ்த்து மடல்கள், லட்சுமி, சிவசங்கரி, ராஜேஸ், ராஜேந்திர குமார்கள் நாவல்களும், சிறுவர் அரிச்சுவடிகளும் விற்பனையாகின்றன. ராஜன் புத்தகசாலை, இல. 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (22848)

### காணவில்லை

எங்கள் கன்னி மாடு ஒன்றை ஒரு வாரத்திற்குமுன் காணவில்லை. இது சொக்கிலேட் கலருடனும், இள்ளம் கொம்புடனும் காணப்படும். இது பற்றி தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து எங்களுக்கு அறியத்தரவும். றெட்னா கபே, 720, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். (22875)

### SPOKEN ENGLISH

Spoken English With Grammar and Literature. ஆங்கிலத்தில் பேசப் பயிற்றுவிக்கப்படுகிறது. V. N. Kandasamy, A I. B (Part I) (London). Inter (London) 87, திருநெல்வேலி றோட், (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (5386)

### சமூகக்கல்வி O/L

நடைபெறவுள்ள பொதுப் பரீட்சை, சாதாரணதரப் பரீட்சைக்கு மாணவர்கள் தாமாகவே மீட்டல் செய்ய, திறமைச்சித்தி பெற, வரலாறு, சமூகக்கல்வி ஆண்டு 11 மாதிரி வினா-விடை குறிப்புகள் ஏற்றது; ஆக்கம்: நா. மயில்வாகனம்; எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (22901)

### தவறிவிட்டது

9ஆம் திகதி அதிகாலை கிளாலியில் இருந்து யாழ்ப்பாணம் வந்த பேருந்தில் மனேஜர், கன்னாதிட்டி, மக்கள் வங்கி முகவரியிட்ட தஸ்தாவேஜுகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ச. பேரானந்தம் சிறுகைத்தொழில் பகுதி, கச்சேரி, யாழ்ப்பாணம் அல்லது க. பத்மநாதன் கிராம சேவை அலுவலர் பளை என்ற முகவரிக்கு அறியத்தரவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும். (22911)

### செயல்நூல் ஆண்டு 11

க. பொ. த. (சா/த) பரீட்சையில் தமிழ் மொழியில் உயர் சிறப்புச் சித்திபெற உறுதுணை புரியும் நூல். மூன்று பகுதி வினாக்களும் விடையும் கொண்டது. ஆக்கம்: பண்டிதர் சு. வேலுப்பிள்ளை. (சு.வே.) வெளியீடு: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை. (5385)

### சைக்கிள் விற்பனைக்கு

மாணவர் அளவு 18'' துவிச்சக்கரவண்டி Lumala ஒன்றும், 22'' வளர்ந்தோர் துவிச்சக்கரவண்டி Grand Champion ஒன்றும் விற்பனைக்கு உண்டு. மு. ப. 9-00 மணி முதல், பி. ப. 5-00 மணி வரை பார்வையிடலாம். க. முத்துக்குமாரசாமி, பாரதி பதிப்பகம் (A. B. Printers) 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-3597]

### இலவச திருமணசேவை

30 வயது, அச்சுவினி, செவ்வாய் 8, கிரகபாவம் 61, அழகிய, படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. வெளிநாடும் கவனிக்கப்படும். தொடர்பு: ஞாயிறு காலை பி.த. விமலா, யாழ்/ நாச்சிமார் கோவிலடி. (22866)

41 வயது, மகம, செவ்வாய் 1, கிரகபாவம் 54, MPCS விகிதருக்கு அரச, தனியார்துறை, வியாபாரம் மணமகள்தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா யாழ். நாச்சிமார் கோவிலடி. (22867)

32 வயது, புனர்பூசம், செவ்வாய் 2, கனடா செல்லவுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. கனடாவில் உள்ளவர்/ செல்ல விரும்புபவர். தொடர்பு: ஞாயிறு காலையில்: து விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி. (22870)

### தாதிமார் தேவை

அனுபவம் உள்ள அல்லது பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்பிக்கவும். அல்லது நேரில் வரவும். சந்திக்கும் நேரம்: காலை 8 மணி—12 மணி வரை, மாலை 4 மணி — 8 மணி வரை. டாக்டர் மு. கனகசபை, எம். கே. எஸ் மெடிக்கல் கிளினிக், 3ஆம் கட்டை, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். (5387)

### இடம்மாற்றம்

கிளவெட்டியில் இயங்கி வந்த மயூரா வைத்தியசாலை தற்பொழுது மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்பாக இயங்குகின்றது (4997)

### திருமண சேவை

நல்லூர் ஓய்வூதியர்களால் நடத்தப்படும் திருமண சேவைக்கு பலதரப்பட்ட குறிப்புகள் கிடைத்துள்ளன; பொருத்தமானவை நிச்சயப் படுத்தப்பட்டுள்ளன. சாதகக் குறிப்புடன் அனுப்பப்படும் விவரங்களுக்கு அமைய பொருத்தமான குறிப்புகளை ரூபா 20/- முத்திரை அனுப்பி தபாலில் பெற்றுக்கொள்ளலாம். இரகசியம் உத்தரவாதம். குடும்ப ஆலோசகர், 52, செம்மணி வீதி, நல்லூர். (22902)

### A/L கணக்கியல்

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை மாணவனால் தனிப்பட்ட ரீதியிலும், பிரத்தியேக வகுப்புகள் மூலமும் கற்பிக்கப்படும். அத்துடன் கூடியளவு பயிற்சிகளுடன் கடந்தகால வினாக்களும் செய்யப்படும்; தொடர்பு: திரு. டானியல், YMCA. உணவகம், Y.M.C.A., யாழ்ப்பாணம். (22863)

### மிளகாய்த்தூள்

இது யாழ்ப்பாண முறைப்படி தரமான மிளகாய் மற்றும் சரக்கு வகைகளைக் கொண்டு கைதேர்ந்த தொழிலாளர்களினால் சுகாதார முறைப்படி வறுத்து அரைக்கப்பட்டது. உங்கள் தேவைக்கேற்ப தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அண்ணா தொழிலகம், இணுவில். (சி-3596)

## 11 பஸ் டிப்போ ஊழியருக்கு ஓய்வு பெற சலுகை

கொழும்பு, அக்: 16 அண்மையில் கொண்டுவரப்பட்ட சுயவிருப்பில் ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் மக்கள் மயப்படுத்தப்பட்ட 11 பஸ் டிப்போக்களில் மேலதிகமாக உள்ள 730 ஊழியர்களுக்கு ஓய்வு பெறச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

சுய விருப்பின் கீழ் ஓய்வு பெற விரும்புபவர்களுக்கு 50 மாத சம்பளம், ஓய்வு பெறுவதற்கான ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படும் என்று உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஓ த)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 19 — 06 — 1941

உதிர்வு: 28 — 09 — 1991

**நடராஜா சண்முகநாதன்**
(கண்ணாடி மாமா)

திதி: 16 — 10 — 1992

ஓசை படாமல் ஓராண்டு ஓடி மறைந்ததுவோ
ஆசை கொண்ட எம்
இதய வாஷை மறந்ததுவோ - எமது
நேசம் கெடாது ஓராண்டென்ன
ஓராயிரம் ஆண்டானாலும்
பாசம் கெடுமோ பரிதவிப்பு விடுமோ
பண்பாளர் பண்பை நினைத்து விட்டால்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

''கிருஷ்ணகிரி''
227, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (22899)

## சித்ராலயா யாழ்நகரில்

★ போட்டோஸ்ரற் பிரதிகள்
Photostat Copies

★ பாஸ்போர்ட் படங்கள்
Passport Photographs

★ தேசிய அடையாள அட்டைப் படங்கள் (அரச அங்கீகாரம் பெற்றவர்கள்)
National Identitity Card Photographers (Government Approved)

★ கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் வேண்டிய அளவுகளில் பெரிதாக்கல்
Black and White Photographs Enlargments

★ கலர்ப் புகைப்படங்கள் (மங்கள வைபவங்கள் உட்பட)
Colour photographs (Indoor and outdoor)

போன்ற உங்கள் தேவைகளுக்கு என்றும்

**சித்ராலயா**

172, ஸ்ரான்லி வீதி (அருச்சுனா வீதி),
யாழ்ப்பாணம். [சி/3591]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 24 — 03 — 1921

ஆண்டவன் அடியில்: 16 — 10 — 1991

அமரர்

**இராமலிங்கம் துரையப்பா**
(Retired Registrar of Lands & Additional District Registrar, Jaffna.)

தங்கள் முழுநிறை வாழ்வில்
எங்கள் சிறப்பு நல்வாழ்வை அமைத்தீர்கள்!

என்றும் தங்களை நினைவு கூரும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (22880)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 30 — 12 — 1924

உதிர்வு: 16 — 10 — 1990

அமரர்

**சங்கரப்பிள்ளை நல்லையா**
(பரஞ்சோதி மாஸ்ரர்)

ஆண்டுகள் இரண்டென்ன இருநூறு சென்றாலும்
ஆறிடுமோ எங்கள் துன்புற்ற மனது
என்றும் உங்கள் நினைவுகளை சுமப்பவர்கள்
இன்றும் ஒருநாள் மறக்காத நினைவுகளுடன்!

-பிள்ளைகள்.

25, கரன் வீதி (பனாவி வீதி),
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (22895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொருளாதார மேம்பாட்டை நாடி

வடபகுதியின் விவசாயப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான நீண்டகாலத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த 'கொமன்வெல்த்' அமைப்பு எனப்படும் பொதுநலவாய அமைப்பின், உபநிறுவனமான பொதுநலவாய அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனம் (C.A.R.D.) முன்வந்துள்ளது.

வடக்கின் விவசாயத் துறையிலும், அதன் மூலம் விவசாயப் பொருளாதாரத்திலும் பெரும் முன்னேற்றங்களையும் வளர்ச்சியையும் தரவல்ல அந்தத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்குவதற்கு கனடா முன்வந்திருக்கிறது.

பொதுநலவாய அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆதரவில் வழங்கப்படவிருக்கும் உதவி, வடக்குக்கு நேரடியாகக் கிடைக்கவிருக்கிறது. ஏனைய வெளிநாட்டு உதவிகளைப் போல கொழும்பு அரசின் மூலம் வழங்கப்படமாட்டாது.

தமிழர் பிரதேசங்களில் ஒன்றான வட பகுதியின் பொருளாதார அபிவிருத்திக்கென, ஒரு திட்டத்தை வகுத்துக் குறித்தொதுக்கிய பொதுநலவாய அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனத்துக்கு ஈழத்தமிழர்கள் நன்றி செலுத்த வேண்டும். அத்திட்டத்திற்குரிய நிதியைக் கொழும்பு அரசின் மூலம் வழங்காமல் நேரடியாக வழங்குவதென்ற முடிவு பாராட்டப்பட வேண்டியதாகும்.

தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்திக்கெனவும், தமிழர்களின் நல்வாழ்வுக்கெனவும் வெளிநாட்டு அரசுகள், வெளிநாட்டு அமைப்புகள், வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள் வழங்கும் நிதி உதவிகளும், பொருள் உதவிகளும் தமிழ்ப் பகுதிகளையோ, தமிழர் கைகளுக்கோ இப்போது வந்து சேர்வதில்லை. தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்திக்கென வெளிநாடுகள் குறித்தொதுக்கும் நல்ல திட்டங்கள், பலவிதமான பொய்க் காரணங்கள் காட்டப்பட்டு தெற்குக்கும் மேற்குக்கும் திசை திருப்பப்பட்டதே இதுவரை கண்ட அனுபவமாகும்.

அதனை ஒரு வழக்கமாக்கிக் கொண்டு ஸ்ரீலங்கா அரசு தமிழ் அகதிகளுக்கென வழங்கப்பட்ட உதவிகளைக் கூட தென்னிலங்கை மக்களுக்குப் பயன்படுத்தி வருவது தெரிந்ததே. கொழும்பு அரசின் இந்த நேர்மையின்மையை பொதுநலவாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் நன்கு தெரிந்து வைத்திருக்கிறது போலும். பிரஸ்தாப நிறுவனத்தைப் போல் ஏனைய வெளிநாட்டு அமைப்புகளும் ஸ்ரீலங்கா அரசின் அபகரிக்கும் புத்தியை, தட்டிப் பறிக்கும் தனத்தைப் புரிந்து கொண்டு தமிழ்ப் பகுதிகளுக்குத் தமது உதவியை நேரடியாக வழங்க முன்வர வேண்டும்.

மேலும், தமிழ்ப் பகுதிகளின் முன்னேற்றத்துக்குப் பொருளாதார மேம்பாடே அடித்தளமாக விளங்க வல்லது. உரிமைப் போராட்டங்களும், அரசியல் போராட்டங்களும் வெற்றி தரும்வரை பார்த்துக் கொண்டிருக்காமல், இப்போதே பொருளாதார வளர்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். பொருளாதார மேம்பாடு தான் மக்களின் சுபீட்சத்துக்கு வழி செய்ய வல்லது. பொருளாதார மேம்பாடும், அபிவிருத்தியும் இல்லையேல் அரசியல் போராட்ட வெற்றிகள் கூட அர்த்தமற்றனவாகிவிடும்.

எனவே தமிழ்ப் பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரியக்கூடிய வெளிநாட்டு அமைப்புகளை இனங்கண்டு, அவற்றின் ஆதரவையும் உதவியையும் பெறுவதற்குத் திட்டமிட்ட முறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தோடு எமது பிரதேசத்தின் மனித வளம், நீர்வளம், நிலவளம், கடல் வளம் ஏனைய மூல வளங்களையும் தக்கபடியும் திட்டமிட்டுப் பயன்படுத்தி பொருளாதார முன்னேற்றத்தை நாடி உழைத்திடுதல் அவசியம்.

# அருகில் ஆஸ்பத்திரி இருந்தாலும் கூட 'கொப்பே' உயிர் தப்பியிருக்க முடியாது

## சபையில் அமைச்சர் ரேணுகா

கொழும்பு, அக். 16

அராலித்துறையில் நிலக்கண்ணி வெடித்த இடத்துக்கு அருகில் ஓர் ஆஸ்பத்திரி இருந்தால் கூட ஜெனரல் கொப்பேகடுவவின் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியாது. அந்த அளவுக்கு அவரின் உடலில் காயங்கள் ஏற்பட்டு இருந்தன.

சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத் இந்த வாரம் நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி எம். பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோ அமைச்சருக்கு முன்பதாக பேசுகையில், ''பொலன்னறுவ ஆஸ்பத்திரியில் போதுமான வைத்திய வசதிகள் இருந்திருப்பின் ஜெனரல் கொப்பேகடுவவின் உயிரைக் காப்பாற்றி இருக்க முடியும் என்று தெரிவித்திருந்தார்.

அவரை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குக் கொண்டுவரும் போது அவரது உடலில் இருந்து ஏராளமான இரத்தம் வெளியேறியிருந்திருக்கும் என்றும் —

காயமடையும் படையினர் விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு வரப்படுகின்றார்கள். அந்த 2, 3 மணித்தியாலயப் பயணத்தின் போது அந்தப் படையினர் இரத்தம் வெளியேறுவதால் உயிரிழக்கின்றனர். போர் முனைப் பிரதேசத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்'' என்றும் அவர் கோரியிருந்தார். (இ-எ)

## தமிழ் இளைஞன் தடுத்துவைப்பு ராணுவத் தளபதிக்கு நோட்டீஸ்

கொழும்பு, அக். 16

இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 19 வயது நிரம்பிய பாலநாதன் யசிதரனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி கோரும் ஆட்கொணர்வு மனு தொடர்பாக — இராணுவத் தளபதி, பாதுகாப்புச் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பித்திருக்கிறது.

பிரதிவாதிகளான இம் மூவரையும் இம்மாதம் 19 ஆம் திகதி தம் முன் ஆஜராகும்படி மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

யசிதரனின் தந்தை பாலநாதன் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவில் கூறப்பட்டிருப்பதாவது;

''நெஞ்சு வருத்தத்துக்குச் சிகிச்சைபெற 15 - 06 - 1990 அன்று திருமலை ஆஸ்பத்திரிக்குச் சென்ற இடத்தில் யசிதரன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

அவருடன் அன்றைய தினம் 22 பேர் கைது செய்யப்பட்டனர்.

யசிதரன் பின்னர் இ. போ. ச. டஸ் ஒன்றில் ஏற்றிச்செல்லப்பட்டார். அதன் பின்னர் யசிதரனுக்கு என்ன நடந்தது, அவர் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார் என்பது அவரது உறவினர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

யசிதரனைக் கைது செய்தது சட்டவிரோதமான செயலாகும்.

யசிதரன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும்''

''இப்படி மனுவில் கூறப்பட்டுள்ளது.

இம்மனு மேன்முறையீட்டு நீதியரசர்கள் டக்ளஸ் விஜயரத்ன, எஷ்மன் வீரசேகரா ஆகியோர் முன் விசாரணைக்கு வந்தது. [இ-எ]

## கிளாலியில் இளைஞன் காயம்

வெளிச்சம் இன்றி மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவர் இரும்புக் கேடரில் மோதுண்டு காயம் அடைந்தார்.

கிளாலியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

கிளாலியில் வீதித் தடுப்புக்காக குறுக்கே போடப்பட்டிருந்த இரும்புக் கேடரிலேயே இந்த இளைஞன் மோதுண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

காயம் அடைந்தவரான உரும்பராயைச் சேர்ந்த ஸ்ரீபதிமநாதன் பார்த்திபன் (வயது 22) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். [இ-15]

## நூலக வாரம்

யாழ் சுவாரத்தினம் மத்திய மகா வித்தியாலய நூலக வாரம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர் வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறும். அதன் நிறைவாக 24 ஆம் திகதி சனிக்கிழமை புத்தகக் கண்காட்சியும் இடம்பெறும். [த]

## குறுகிய காலப் பயிற்சி

யாழ்ப்பாணம், அக். 16

திருநெல்வேலி விவசாய மாவட்ட பயிற்சி நிலையத்தில் எதிர் வரும் 19 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை மரக்கறிச் செய்கை, நாற்று மேடைப் பராமரிப்பு, பதிய முறை இனப்பெருக்கம் ஆகிய விடயங்களில் குறுகிய காலப் பயிற்சி வழங்கப்படும். [த]

## பாதிரியார் பலியான சம்பவம்:

# ஒரு பொலீஸ்காரர் கைது; மற்றொருவர் வேலை நீக்கம்

கொழும்பு, அக். 16

அண்மையில் திருகோணமலையில் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இறிஸ்தவ பாதிரியாரான வண. பி. டி. லிமா பலியான சம்பவம் தொடர்பாக ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்; இன்னொரு பொலீஸ் கான்ஸ்டபிள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் வின்சன்ட் பெரேரா அண்மையில் நாடாளுமன்றத்தில் இத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி வண பிதா லிமா துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான சம்பவம் தொடர்பாக மேலும் தகவல்களை கோரும் கேள்வி ஒன்றை சுதந்திரக் கட்சி எம். பி. ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

பிரதமரின் சார்பில் அக் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் வின்சன்ட் பெரேரா மேலும் தெரிவித்ததாவது;

திருமலை - கண்டி வீதியில் உள்ள படையினரின் பதுங்கு குழி ஒன்றில் கடமையில் இருந்த இரு பொலீஸாருடன் கடமை நேரம் முடிந்த ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள் பேசிக் கொண்டிருந்த சமயம்— அவர்களில் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள் தமது ரைபிளில் ரவைகளைப் போட்டுக் கொண்டிருந்தார்.

திடீரென்று அந்த ரைபிளில் இருந்து புறப்பட்ட வேட்டு அச் சமயம் பதுங்கு குழியைத் தாண்டி சைக்கிளில் சென்று கொண்டு இருந்த வண. பிதா லிமா மீது பாய்ந்தது. துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காரணமாக வண. லிமா உயிரிழந்தார் என்று பிரேத பரிசோதனை அறிக்கை கூறுகிறது.

இவ்வாறு அமைச்சர் பெரேரா பதிலளித்தார். (ஒ-எ)

## இலங்கையை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது நாம் எப்படிச் சும்மா இருக்கமுடியும்?

1935 வரை இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியாகத்தான் இருந்து வந்தது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

தமிழகத்திலிருந்த அரசியல் தலைவர்கள் செய்த மிகப் பெரிய முட்டாள்தனம் இலங்கை அரசியல்வாதிகளைத் தனிமைப்படுத்தியது தான்.

1935 இல் ஆங்கிலேயர்கள் சத்தம் போடாமல், காதும் காதும் வைத்தால் போல் இலங்கையையும் இந்தியாவையும் பிரித்தபோது சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காங்கிரஸ் கட்சி, அதிலும் முக்கியமாக நமது தமிழக காங்கிரஸ் தலைவர்கள் அதைப் பெரிய பிரச்சினையாக்கி இருந்திருந்தால் 1948 இல் பிரிட்டிஷ் அரசு இலங்கையை ஒரு சுதந்திர நாடாக அறிவித்திருக்க முடியாது.

1947 வரை இலங்கை அரசியல் வாதிகள் ஒருவர் கூட சுதந்திரம் கேட்கவில்லை. ஏனென்றால் இந்திய சுதந்திரம் தங்களுக்கும் சேர்த்துத் தான் என்று அவர்கள் கருதி வாரர்கள்:

பீஹார் மாநிலத்தைச் சேர்ந்த விஜய சின்ஹா என்னும் அரசனின் பெயரிலிருந்து தான் ''சிங்களர்'' என்ற பெயரே வந்தது என்று அவர்களே ஒத்துக்கொள்கின்றனர்.

எனவே, மீண்டும் இலங்கை, இந்தியாவின் இணைவதில் எந்தவிதத் தவறும் இல்லை. நாம் இலங்கைப் பிரச்சினை...

[உ]

## ராணுவம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, பலாலி ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதாகவும்— அந்த அதிகாரி தெரிவித்தார் என்று அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அல்லது பிரதான நகரம் ஒன்றில் குண்டுத் தாக்குதல் நடத்தும் திட்டம் ஒன்றும் விடுதலைப் புலிகளிடம் இருப்பது குறித்து தமக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்திருந்தாராம். (இ-10)

## லொறி டயருக்குள்...

(2 ஆம் பக்கத்தொடர்ச்சி)

துச் செல்லப்படுவதாகக் கிடைத்த தகவலின் பேரில் பொலீஸ் கோஷ்டி ஒன்று குறிப்பிட்ட லொறியை வழி மறித்தது என்றும்—

லொறியின் டயர்களைக் கழற்றிப் பார்த்தபோது 500 பொலித்தீன் தாள்கள் கொண்ட 16 பைக் கற்றுகள் அதற்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட லொறி புதுக்குடியிருப்பை நோக்கிச் சென்றதாகவும் அதன் சாரதி உடப்பு கிராமத்தைச் சேர்ந்தவர் எனவும்—

சந்தேகத்தின் பேரில் முத்தையாபிள்ளை என்பவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் ... யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ். கல்வித் திணைக்களம் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலையும் நான்கு ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

### 17 வயதுப் பிரிவு

17 வயதுப் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். ஆட்டங்கள் வருமாறு:-

- ★ விக்ரதலரோதயா எதிர் புங்குடுதீவு ம. வி.
- ★ சென். ஜோசப் எதிர் மட்டுவில் சந்திரபுர, ஸ்கந்தவரோதயா.

### 19 வயதுப் பிரிவு

19 வயதுப் பிரிவில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களின் விபரம் வருமாறு:-

- ★ சென். ஹென்றீஸ் எதிர் உரும்பராய் இந்து.
- ★ வட்டு இந்து எதிர் சாவகச்சேரி டிறிபேக்;

★ ★ ★

ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

- ★ திருமலை நட்சத்திரங்கள் அணி எதிர் பாரதி அணி.
- ★ யங் ஹென்றியன் அணி எதிர் தம்பாட்டி அணி.
- ★ சென் மேரிஸ் அணி எதிர் பாடும்மீன் அணி.

★ ★ ★

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

- ★ கொக்குவில் மத்தி எதிர் வளர்மதி வி. க.
- ★ சென். மேரிஸ் எதிர் சென். நிக்கலஸ். (உ)

## படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தல் நடத்தினர்.

இந்தச் சம்பவத்தின் போது இரு மீனவர்கள் கடலில் பாய்ந்து மயிரிழையில் உயிர் தப்பி கரை சேர்ந்தனர்.

அவர்களது படகு என்ஜினைப் படையினர் கடலில் தூக்கி வீசிவிட்டனர் என்றும், மீன்பிடி வலைகளையும் அவர்கள் வெட்டி துண்டாடிவிட்டுச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-165)

## வடக்கு - கிழக்கு...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வந்தது.

பிரிட்டிஷ் துணை அமைச்சருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்கள் சிநேகபூர்வமானவையாக இருந்ததாக —

ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

துணை அமைச்சர் மார்க் லெனாக்ஸ் பொய்ட், வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது மனித உரிமைகளைப் பேணுவதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார் என்று அறியப்படுகிறது.

கொழும்பில் பணியாற்றிய முன்னாள் பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிட் கிளாட்ஸ்ரோன் திருப்பி அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

அதன் பின்னர் கொழும்பு வந்திருக்கும் முதலாவது பிரிட்டிஷ் அமைச்சர் திரு. மார்க் பொய்ட் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை —

இனப்பிரச்சினைக்கு இணக்கமான உகந்த தீர்வு ஒன்றைக் காணுமுகமாக தமிழ்க்கட்சிகளின் பரிசிலனைக்காக வேலைத் திட்ட ஆவணம் ஒன்று தெரிவுக்குழுவினால் நேற்று முன்தினம் (புதன்கிழமை) வெளியிடப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

நிறைவேற்று அமைச்சர்கள் தலைமையில் வடக்கு - கிழக்கில் இரு மாகாணசபைகள், நிறுவுவது என்றும் இரண்டும் இணைந்து முதலமைச்சரின் கீழ் பிராந்திய சபை ஒன்றை நிறுவுவது என்றும், அந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். [அ-எ]

## பொலன்னறுவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்ந்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் சம்பவம் குறித்து நேற்று கொழும்பில் நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவிக்கும்போது—

தாக்குதல் நடந்த கிராமங்களுக்கு மூன்று மைல் தொலைவில் இராணுவ முகாம் அமைந்துள்ளது. சம்பவம் அறிந்து இந்த முகாமில் இருந்து இராணுவத்தினர் மேற்படி பகுதிகளுக்கு விரைந்தனர். விமானப் படையின் ஹெலிக்கொப்டர்களும் இராணுவத்துக்கு உதவிக்குச் சென்றன.

ஆனால் ஹெலிக்கொப்டர்கள் வரத் தாமதமாகியதால் ஒன்றரை மணித்தியாலங்களுக்குள் தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

பின்னர் படையினர் காட்டுப் பகுதிகளில் பதில் தாக்குதல்களை நடத்தினர்.— என்றார். (ஒ-எ-த-10-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை செல்வரத்தினம்
(மானிப்பாய்)

இளைப்பாறிய கூட்டுறவு உத்தியோகத்தரும், வட பிராந்திய கூட்டுறவுச் சபையின் முன்னாள் செயலாளரும், யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவரும், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவரும், மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவருமான பொன்னுத்துரை செல்வரத்தினம் காலமானார்.

அன்னார் இலகவதியின் [இளைப்பாறிய ஆசிரியை, மானிப்பாய் இந்துக்கல்லூரி - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி] அன்புக் கணவரும், இராசரத்தினம், கந்தசாமி, நடராசா, திருமதிகள் மனோன்மணி மகேந்திரநாதன், குணமணி அன்னப்பா, இரத்தினமலர் இராஜேந்திரம் ஆகியோரின் சகோதரரும், திருமதிகள் ஞானேஸ் ஜெகநாதன், தனலட்சுமி இலங்கநாதன், தங்கராணி அருணாசலம் ஆகியோரின் மைத்துனரும், அருட்திரு ஜெயக்குமாரன், அன்னப்பா, ஜெயசீலன், ஜெயராஜன் ஆகியோரின் மாமனாரும், இருசாந்தி சிவரஞ்சினி சிவரஞ்சன், வத்சலா, சசிகரன், நிரஞ்சலா, தயானி, சுஜந்தன், சுப்றா, உதயமலர், பவானி ஆகியோரின் பெரியப்பாவுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று 16-10-92 பிற்பகல் 2-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மனைவி.

"மன்றம்"
லோட்டன் வீதி,
மானிப்பாய். (22907)

## நடராஜா நல்லைநாதன்

சித்தன்கேணியைச் சேர்ந்த நடராஜா நல்லைநாதன் (பிரதம லிகிதர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, சங்கானை) 14-10-1992 அன்று சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற எஸ். வி. நடராசா, திருமதி நடராசா சேதுப்பிள்ளையின் மூத்த புதல்வனும், திருமதி கமலாதேவியின் அன்புக் கணவரும், திருலோகநாதன், [ஜெயலட்சுமி, காலஞ்சென்ற [சிவசுதன், ஞானலக்சுமி, சுஜாதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பேரின்பநாயகி சுப்ரமணியம் [ஹற்றன்], ஆனந்தராசா [அஞ்சல் அதிபர், வட்டுக்கோட்டை], ஆனந்தக்குமாரசாமி (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), திருமதி நாகேஸ்வரி கமலநாதன், திருமதி சற்குணதேவி சின்னத்துரை, பாலசுப்ரமணியம் (சவுதி) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 15-10 1992 இல் நடைபெற்றன.

தகவல்;
திருமதி கமலாதேவி

சங்கானை றோட்,
சித்தன்கேணி. (22914)

## தம்பையா இராசரத்தினம்
(ஓய்வுபெற்ற மலாயன் பென்சனியர்)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பையா இராசரத்தினம் (ஓய்வு பெற்ற மலாயன் பென்சனியர்) நேற்றுக் காலமானார். இவர் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், மீனலோசனி, காலஞ்சென்ற விஜேந்திரன், ஜெகசோதி (யாழ் சிறைச்சாலை), திருச்செல்வம் (U. K.), அருட்செல்வம் (பிரதேச சபை-வட்டுக்கோட்டை), பரஞ்சோதி (விற்பனைத்திணைக்களம், கிளிநொச்சி) இராஜராஜேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இராசரத்தினம், லோகநாயகி, மணிமேகலை, கைலாசபதி, ஞானாம்பிகை, இராஜயோகம், (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மார்க்கண்டு (மலேசியா), காலஞ்சென்ற தம்பிராஜா (மலேசியா), துரைராஜா (சித்தன்கேணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் வட்டு மேற்கில் நேற்று 15-10-92 இல் இடம்பெற்று, தகனக் கிரியைகள் வழுக்கையாறு மயானத்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி தயவாக வேண்டுகின்றோம்.

தகவல்:
இ. அருட்செல்வம்
(மகன்)

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (5391)

## கணபதிப்பிள்ளை இராசலட்சுமி

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திக்கம், நீர்வளைப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்தவருமான க.இராசலட்சுமி 06-10-92 இல் கனடாவில் காலமானார்.

இவர் கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், செல்லம்மா [திருகோணமலை], காலஞ்சென்ற இராசையா, சோமசுந்தரம் (வேலணை), சிற்றம்பலம் [ஆயுள்வேத வைத்தியர், ஏழாலை], மார்க்கண்டு [மாதகல்], சிவபாக்கியம் [வேலணை], காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை [சுருவில்], காலஞ்சென்ற நடராசா [சாவகச்சேரி], ஆகியோரின் அன்புச் சகோதரியும், அம்பிகைபாலன் [ஜேர்மனி], கமலாம்பிகை [கனடா], நிர்மலாதேவி, சிவலிங்கம் [கனடா], பராசக்தி [கனடா] விமலாதேவி [கனடா], மகேந்திரராசா [கனடா], திருச்செல்வம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறிதரன், கனகேஸ்வரன், சிவலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், மயூரன் (கனடா), லக்ஸ்மன் [கனடா], சிந்துஜா, டினோஜா, (கனடா) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [17-10-92] சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:- 12-10-92 இல் பிரசுரித்த அன்னாரின் மரண அறிவித்தலில் பிறந்த இடமும், திகதியும் தவறியதற்காக வருந்துகிறோம்.

தகவல்:
கனகேஸ்வரன்
(மருமகன்)

அல்வாய் மேற்கு,
திக்கம். (22916)

# அரசு திட்டமிட்டுச்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால் இது நடந்த சூழ்நிலை, நடந்த இடம் ஆகியவற்றைப் பார்க்கும்பொழுது இது ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட படுகொலையாக இருக்கலாமென நான் சந்தேகப்படுகிறேன்.

கொழும்பில் ஐ நா சபையின் மனித உரிமைக்குழு தங்கியிருக்கும் ஒரு முக்கிய சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் பொதுமக்கள் மீது—அதிலும் முஸ்லிம் மக்கள் மீது தாக்குதலை நடத்தியிருப்பார்கள் என்று கூறமுடியாதுள்ளது. இச்சந்தர்ப்பத்தை அரசு பயன்படுத்தியிருக்கக்கூடும்.

இப்படியான படுகொலைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எவ்வித பயனையும் கொடுக்கப்போவதில்லை. இத்தகைய கொலைகளில் பயனடைவது அரசாங்கம் தான்.

### அரசுக்கு உதவியாக இருக்கும்

விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக சர்வதேசத்தின் முன்காட்டி, அவர்களை ஓரம் கட்டிய பின்னர் ஏனைய குழுக்களுடன் சேர்ந்து தமிழ் மக்கள் மீது தீர்வொன்றை திணிக்க அரசு முயல்கின்றது. அத்தகைய சூழ் நிலையில் இப்படியான ஒரு படுகொலை அரசுக்கு உதவியாக இருக்கும்.

அதேவேளை—

முஸ்லிம் மக்களைப் பிரிக்கின்ற — தமிழீழத்தை துண்டாடுகின்ற — அரசின் முயற்சிக்கும் இப்படுகொலைகள் உதவியாக இருக்கலாம்.

இத்தகைய பதிலடி தாக்குதல்கள் அரச படைகளால் தமிழ் மக்கள் மீதும், முஸ்லிம்கள் மீதும் — முக்கியமாக தென் தமிழீழத்தில்— கிழக்கு மாகாணத்தில் — நடத்தப்பட்டதே வரலாறு

### பழி புலிகள் மீது

பதிலடித் தாக்குதல்கள் அண்மையில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள், முஸ்லிம்கள் அழிக்கப்பட்டு பழி புலிகள் மீது பொய்யான செய்திகள் மூலம் பரப்பப்பட்டிருக்கின்றது

திட்டமிட்ட ரீதியில் அரசு இந்தப் படுகொலைகளைச் செய்கிறதா என்று முஸ்லிம் தலைவர்களும் சந்தேகங்களை எழுப்பியுள்ளனர்.

ஆகவே இத்தகைய படுகொலைகள் — பொது மக்கள் மீது, குழந்தைகள் பெண்கள் மீது நடத்தப்படுகின்ற படுகொலைகள் — விடுதலைப் போராட்டத்திற்கு எந்த வித பலனும் அளிக்கப் போவதில்லை, மறு பக்கத்தில் இத்தகைய கொலைகளால் பயனடைவது அரசு தான் அழித்தொழிப்பதற்குரிய வசதியாக அரசுக்குப் பயனளிப்பதாகவே இருக்கும்.

அரசின் மனித உரிமை மீறல்கள் உலகளாவிய ரீதியில் அனைவருக்கும் தெரிந்தவையாகத்தான் இருக்கிறது,

### ஐ. நா ஆராய்ந்து வருகிறது

தென்பகுதியில் நடந்த 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படுகொலைகளைப் பற்றி ஐ. நா மனித உரிமை குழு இப்போது ஆராய்ந்து வருகிறது. அதேபோன்று தமிழீழப் பகுதிகளில் நடைபெற்ற படுகொலைகள், குண்டு வீச்சுகள் ஆகியவையும் தென் தமிழீழத்தில் பொதுமக்கள், இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் காணாமற் போனது போன்ற நிகழ்ச்சிகளும் ஸ்ரீலங்கா அரசை மனித உரிமை மீறல்களைச் செய்கின்ற நாடுகளில் முதன்மை ஸ்தானத்தில் சர்வதேச உலகம் கணித்திருப்பதும் அனைவருக்கும் தெரியும்.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் அரசு எவ்வாறு தான் செய்த படுகொலைகளை மூடி மறைத்து வருகின்றதோ அதேபோன்று தான் செய்த படுகொலைகளை விடுதலைப் புலிகள் மீது சுமத்துவதற்கு அதற்குத் திறமையும், தகுதியும், அனுபவமும் இருக்கிறது என்பதே எனது கருத்து.

பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதை விடுதலைப் புலிகள் தங்கள் லட்சியமாகக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் அரச படைகள் மீது, ஆயுதம் தரித்த குழுக்கள் மீது, அரசால் பயிற்சியளிக்கப்பட்டு ஆயுதமளிக்கப்பட்ட பல்வேறு குழுக்கள் மீது தான் இது வரை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அப்படியான தாக்குதல்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மனித உரிமை மீறல் சம்பவங்களாக அரசால் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன.

பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதல்ல புலிகளின் நோக்கம். அவர்களுக்கு திறமையும் பலமும் இருக்கிறது. இராணுவத்தின் மீது ஆயுதப் படைகள் மீதே தமது லட்சியத்தை நிறைவேற்ற அவர்களுக்கு சந்தர்ப்பம் இருக்கும்போது, பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தி சர்வதேச ரீதியாக தமக்கு களங்கம் கற்பிக்க ஒரு போதும் முன்வரப் போவதில்லை — என்றார்.

### தென்மராட்சியில் வயிற்றோட்டம்

தென்மராட்சியில் கொடிகாமம் மந்துவில் மற்றும் பகுதிகளில் வயிற்றோட்ட நோய் வேகமாகப் பரவி வருகிறது.

இந் நோயினால் பாதிக்கப்பட்ட பலர் சாவகச்சேரி, வரணி ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ-117)


யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

நூலக வாரமும் புத்தகக் கண்காட்சியும்

16 — 10 — 1992 தொடக்கம் 23 — 10 — 1992 வரை

புத்தகக் கண்காட்சி: 24 - 10 - 1992

சிறப்பம்சம்:- ஈழத்து எழுத்தாளர் ஆக்கம். படைப்பாளிகள் ஒவ்வொரு பிரதி விலைக்கோ இரவலாகவோ தந்து உதவவும்.

★ பெற்றோர், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் ஒத்துழைப்பைப் பெரிதும் நாடுகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
பா. அ. ச., ப. மா. சங்கம்.

(22906)


# மரண அறிவித்தல்கள்

## S. R. செல்வரஞ்சன்

S. R. செல்வரஞ்சன் 13 - 10 - 92 இல் லண்டனில் காலமானார். இவர் டச் வீதி, தெல்லிப்பழை செல்லராசையா தம்பதிகளின் அருமைப் புதல்வனும், திருமதி அருள்மலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற S. S. கார்த்திகேசு உபதேசியார் [மெதடிஸ்த சபை] திருமதி கார்த்திகேசு [லண்டன்] அவர்களின் மருமகனும், சுரேஸ் [லண்டன்], பிறேமினி [இலங்கை வங்கி], காமினி [லண்டன்] ஆகியோரின் அருமைச் சகோதரனும், செல்வகுமார், மைக்கல் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (17-10-92) சனிக்கிழமை லண்டனில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்;
S. D. பொன்னையா.
(சித்தப்பா)

அரசடி வீதி,
இருபாலை கிழக்கு,
கோப்பாய். (22915)

சுழிபுரம் - தேரியந்தோட்டம்

## வைத்திலிங்கம் அம்பலவாணர்
(கருப்பட்ட முறிப்பு முன்னாள் உப தபால் அதிபர்)

சுழிபுரம், தேரியந்தோட்டம் வைத்திலிங்கம் அம்பலவாணர் [துரைராசா] கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற மலாயன்பென்சனர் வைத்திலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், சிதம்பரநாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சிறீபதி [அமெரிக்கா], மகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், மருந்தி (R. M. P.), கனகசபாபதி [Engineering Asst. Water Supply], ஜெயராசா சுந்தரம் [Tuckers, Ceylon Printers முன்னாள் அலுவலர்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைரவநாதன், மகேஸ்வரி [அமெரிக்கா] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அம்பலவாணரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 16-10-92 வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

தகவல்;
வை. கனகசபாபதி
[இராஜதுரை]

தேரியந்தோட்டம்,
சுழிபுரம். [C/3600]

## யுவக்கீன்பிள்ளை ஆனாசி

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற யுவக்கீன்பிள்ளை (தம்பிமுத்து) யின் அன்பு மனைவி ஆனாசி 15-10-92 இல் இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற அருட்சகோதரி மேரி கிறின்ரினின் அன்புச் சகோதரியும், அருட்சகோதரி பெனடிக்ராவின் மாமியாரும், அருட்சகோதரி விஜயாவின் பேர்த்தியும், மேரி றெஜினா, மரியமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், அந்தோனிப்பிள்ளை மேரிஜோசவ் [தங்கமணி மாலை], வஸ்தியாம்பிள்ளை ஜோசவ் ஆகியோரின் மாமியாரும், யூலியற் றேமண்ட, நிர்மலி மார்க் அன்ரனி, கீதாஞ்சலி டொமினிக், ஐயன்ச்ரையின், றுஷாந்தி, கிறிஷாந்தி, ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 16 - 10 - 92 இன்று பிற்பகல் 3 மணியளவில் 9/1 துரையப்பா லேன், ஈச்சமோட்டை இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்;
அந்தோனிப்பிள்ளை -
மேரியோசப்.

9/1, துரையப்பா லேன்,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். (22917)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 898/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org